செய்யூர் கூட்டுறவு வேளாண்மை வங்கி

* 540 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், செய்யூர் கூட்டுறவு விவசாய வங்கி, செங்கற்பட்டு மாவட்ட மத்திய வங்கிக்கு குறிப்பிட்ட காலத்தில் பணம் செலுத்தவில்லை என்பது 1967 அல்லது 1968-ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (இ) காஞ்சீபுரம் கூட்டுறவு மத்திய வங்கிக்கு செய்யூர் கூட்டுறவு வேளாண்மை வங்கி 30—6—1967 அன்றுள்ளபடி, குறுகிய காலக் கடன்களாக ரூ. 63,626-ம், நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 8,101-ம் தவணை கடந்த நிலுவையாகச் செலுத்த வேண்டியிருந்தது. 30—6—1968 தவணை கடந்த கடன் பாக்கி ஏதுமில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, செய்யூர் கூட்டுறவு விவசாய வங்கியிலிருந்து செங்கற்பட்டு மத்திய வங்கிக்குக் குறிப்பிட்ட காலத்தில் பணம் செலுத்தாமல் இருந்தால் அந்த வங்கியிலிருந்து மாவட்ட வங்கிக்குப் பிரதிநிதியாகச் செல்வதற்கு வழி ஏதும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இது கடனைப் பற்றிய வினு. மாவட்ட வங்கிக்குப் பிரதிநிதியாக வர முடியுமா என்பது சட்டப் பிரச்னை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, ஓவர்டியூஸ் இருந்தால் சூபர்சீட் செய்வேன் என்கிறுர்கள். கோவாபரேடிவ் பாங்கிகள் எதையும் சூபர்சீட் செய்ய நடவடிக்கை எடுத்து இருக் கிறுர்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: In answer to the second part, I had answered that there was overdue on 30th June 1967. There was no overdue on 30th June 1968. The department had taken active steps to reduce the overdues. They were successful in reducing the overdues. There was no question of supersession.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, டிபார்ட்மெண்டு மூலமாக ஓவர்டியூசைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படு கிறது என்று சொன்னுர்கள். சிலவற்றிற்கு டிபார்ட்மெண்ட் அலுவலர்களை அனுப்பி, ஒரு ஆண்டு காலம் கொடுத்து, ஓவர் டியூசைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. மற்றும் சிலவற்றை சூபர்சீட் செய்கிறது. இப்படிச் செய்யப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The time given is not one week. It is more than one week. They give ample time to enable the societies to bring the overdues to normal. The idea is,

1971 ஜூலை 29]

these overdues should be brought down. Otherwise, these banks will not be eligible to receive any assistance or loan from the Reserve Bank of India.

வட ஆற்காடு மாவட்ட சவரத்தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

* 541 வினு—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் சவரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) மேற்படி சங்கத்திற்கு இதுவரை அரசு நிதி அளிக்கப் படவில்லை.

(உ) எழவில்லை.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்டு பல முறை நிதி கோரி அரசாங்கத்திற்கு மனு செய்யப்பட்டும், அமைச்சர் அவர்களுடைய செயலாளர் நேரடியாக வந்தபோது அவரிடம் மனு கொடுக்கப் பட்டும், இதுவரைக்கும் அவர்களுக்கு நிதி கிடைத்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு நிதி கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்தச் சங்கம் பதிவு செய்யப்பட்டது சென்ற ஆண்டு அல்ல. பதிவு செய்யப்பட்டது 1969-இல். அதற்குப் பிறகு, பிற்பட்டோர் நலனுக்காக ஒரு தனித் துறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத்தகைய உதவிகளை அந்தத் துறை செய்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இதே மாதிரியாக திருநெல்வேலியில் ஒ. 2114 என்ற எண்ணில் 1965-இல் ஒரு க்ஷவரத் தொழிலாளர் சங்கம் ஏற்படுத்தப்பட்டு அதில் 100 பேர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்காகக் கடன் கேட்டு, இதுவரை எந்தப் பலனும் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கடன் கொடுத்துதவ அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இப்படிப்பட்ட சங்கங்களுக்கு பிற்பட்டவர்களுக்காக, க்ஷவரத் தொழிலாளர்களுக்காக, சலவைத் தொழிலாளர்களுக்காக கூட்டுறவுத் துறை மூலமாகக் கடன் கொடுப்பதால் என்ன கேடு வருகிறதென்றால், கடன் திரும்பி வருவதில்லை. அப்படிப் பணம் கொடுப்பதை உதவித் தொகையாகக் கொடுப்பது நல்லது என்று எண்ணி, பிற்பட்டோர் நலனுக்கென்று உள்ள துறை மூலமாக, மாண்புமிகு திரு. இராசாராம் மேற்பார்வையில் அவர்களுக்கு முற்றிலும் மானியமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.